# 1.1.3 MoU's with relevant Organization for the activities on courses of respective programme

## Department of Tamil - MoU Documents

**2017-2018 to 2021-2022**

| S.No | Name of the Institution/Industry/Organization |
|---|---|
| 1 | Tamil University, Thanjavur |
| 2 | Sanga Illakiya Aaivu Naduvam |
| 3 | MYRADA, Erode |
| 4 | Oru Rubai Ariviyal Tamil Arakattalai |

**2017-2022**

**Tamil University**

**Memorandum Of Undertanding**
**between**
**The Tamil University, Thanjavur,Tamil Nadu,India**
**And**
**P.K.R. Arts College For Women, Gobichettipalayam.**

The Tamil University ,Thanjavur and P.K.R. Arts college for women, Gobichettipalayam.

(hereafter referred to as both the institutions ) enter into agreement under the following terms for the purpose of furthering educational and research activities and thus deepening the friendship between both the Institutions.

1.Both the Institutions agree to co-operate in order to expand opportunities for further development of research and other academic activities.The cooperation will include the following activities:

i. exchange of teaching staff, researchers and administrative officials
ii. exchange of students for the participation in the programmes organized in both the institutions
iii. organizing joint research activities , seminars,conferences,workshops and short term courses
iv. Linkage programmes with foreign and other Universities such as seminars, conferences, workshops and short term courses
v. getting recognition as co- guide with Tamil University
vi. to conduct certificate courses of tamil university through the distance mode
vii. to give training to tamil department students
viii. other exchange activities to which both the Institutions agree.

Initially the exchange activities would be confined to the following broad fields: Fine Arts ,Music,Drama&Theatre Arts,Folklore ,Tamil studies and other areas of common interest.

2.The details of exchange mentioned above are determined by mutual agreement between both the Institutions.

3.This agreement will come into effect upon signing by the Heads of both the Institutions.The term of validity is five years from the data of the later signature and can be exteneded through a joint recommendation by both the Institutions. This agreement may be terminated, even within the term of validity by either or both the Institutions upon submission of a request for its cancellation six months in advance.

Institutions will sign on the dates below as evidence that the agreement between both of us has been realized.

20/12/17
Vice Chancellor
Tamil University
(with seal)

Vice-Chancellor
Tamil University
Thanjavur-613 010

20/12/17.
Principal
P.K.R. Arts College for women
(with seal)

PRINCIPAL I/C
P.K.R. ARTS COLLEGE FOR WOMEN
(AUTONOMOUS)
GOBICHETTIPALAYAM

P.K.R. ARTS COLLEGE FOR WOMEN (AUTONOMOUS) GOBI Pin-638 476

REGISTRAR 20/12/17
TAMIL UNIVERSITY
THANJAVUR-613 010

Witness:
1. P. NATESAN.
2. N. CHANDRA
3. G. S. KAUSALYA
20/12/17
Dr. J. DEVI
20.12.17

# Sanga Illakiya Aaivu Naduvam



भारतीय गैर न्यायिक

बीस रुपये Rs.20

रु.20

TWENTY RUPEES

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU - 9 MAR 2022 02AC 237202

₹20

DEPARTMENT OF TAMIL
P.K.R. ARTS COLLEGE FOR WOMEN
GOBI.

G.C. ரவிச்சந்திரன்
முத்திரைத்தாள் விற்பனையாளர்,
கோபிசெட்டிபாளையம்.
உரிமம் எண்: 2/2004/கோபி.

புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி

(தன்னாட்சி)

தமிழ்த்துறை

கோபிசெட்டிபாளையம்

&

சங்க இலக்கிய ஆய்வு நடுவம், சென்னை.

தமிழ்நாடு,இந்தியா. (Reg. No: o7/2021)

இருநிறுவனங்களுக்கிடையேயான

புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

29/07/2021

Dr. S. SURESH
M.A.,M.Phil.,Ph.D.,PGDFM.,
Founder - Chairman
SANGA ILAKKIYA RESEARCH CENTRE
Perambalur - 621 212
TAMILNADU, INDIA.

29/07/2021

Dr. D. MYTHILI
PRINCIPAL
P.K.R. Arts College For Women
(Autonomous)
Gobichettipalayam - 638 476,
Erode District.

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி, பெண்களுக்கான உயர்கல்விப் பணியில் 28 ஆண்டுகளாக சிறப்பாக செயலாற்றி இயங்கிக் கொண்டிருக்கிறது. பாரதியார் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி உரிமையையும், NAAC அமைப்பின் 'A' தரச்சான்றிதழை இருமுறையும் பெற்றுள்ளது. இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி மாணவர்கள் என 3000 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. உயர் கட்டமைப்பு வசதிகளுடன் மிகச்சிறந்த அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு மாணாக்கருக்கு நல்ல வழிகாட்டுதல்களுடன் செயல்பட்டு வருகின்றது. பாடத்திட்டம் தவிர்த்து இன்ன பிற கலைகள் மற்றும் இலக்கியப் பயிற்சிகளும், பட்டயப் படிப்புகளும் மாணாக்கரின் தனித்திறன்களை மேம்படுத்திச் சிறந்த கல்வியாளர்களாக உருவாக்கி தனித்துவத்துடன் செயல்பட்டு வருகிறது.

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டு இளங்கலையும், 2017 ஆம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம் தனித்துறையாகத் துவங்கப்பட்டது.

இலக்கியக் கல்வியோடு மாணவர்களின் தனித்திறமைகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு விதமான கருத்தரங்குகள், பயிலரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், இலக்கியச் சொற்பொழிவுகள், தமிழ் இலக்கிய விழாக்கள் போன்றவைகளை நடத்தி வருகின்றோம். ஆராய்ச்சி மாணவர்களுக்கு (M.phil. Ph.D) தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சியினை மேம்படுத்தும் வகையில் செவ்விலக்கிய ஆய்வு நடுவம் எனும் அமைப்பு தமிழ்த்துறையின் சார்பாக உருவாக்கப்பட்டு அதன் மூலம் செவ்விலக்கியங்கள் சார்ந்த ஆராய்ச்சிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஆய்வு மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி புத்தகம் வெளியிடுவதற்கும், தேசிய பன்னாட்டு, அளவிலான ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்பிக்கவும் செலுத்தி வருகிறோம்.

சங்க இலக்கிய ஆய்வு நடுவம் தமிழ்ப் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டும் தமிழ் கூறும் நல்லுலகில் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்கள் படைப்புகளை உலக அரங்கில் வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற நோக்கிலும் 06.03.2016 அன்று தொடங்கப்பட்டது. அதனை மெய்ப்பிக்கும் விதமாகத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் கொண்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்னும் மேம்பட்ட சேவைகளை வழங்கும் பொருட்டு பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி தமிழ்த்துறை சார்பில் முதல்வர் முனைவர் தே.மைதிலீ அம்மா அவர்கள் மற்றும் சங்க இலக்கிய ஆய்வு நடுவத்தின் நிறுவனர் மற்றும் முனைவர் சே.கரேக அவர்களுக்கிடையே 29.07.2021 அன்று புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டது.

உடன்படிக்கை நிபந்தனைகளும் நெறிமுறைகளும்:

1. இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதன் மூலம் மாணாக்கரின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்பை நல்குதல் மற்றும் பல்துறை அறிவை வளர்க்கப்பயிற்சியளித்தல்.

2. தமிழ்மொழி மற்றும் அது சார்ந்த நூல்கள், ஆய்வேடுகள், கையேடுகள், குறிப்பாக மாணாக்கரின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் முகமாகப் பதிப்பிப்பதற்கான முன்னெடுப்புகளை இரு நிறுவனத்தாரும் கலந்தாலோசித்து மேற்கொள்ளுதல்.

3. இரு நிறுவனங்களின் சார்பாக நடைபெறும் நிகழ்வுகளின் உருவாக்கப்படும் வெளியீடுகளை இணைந்து வெளியிடுதல்.

4. இரு நிறுவனங்களும் இணைந்து நடத்தும் நிகழ்வுகளின் செய்தி அறிக்கையை வெளியிடும்போது இரு தரப்பினரின் (கல்லூரி முதல்வர் மற்றும் சங்க இலக்கிய ஆய்வு நடுவம் நிறுவனர்) இசைவு பெற்று வெளியிடுதல்.

5. இந்த உடன்படிக்கை பத்து ஆண்டு காலம் (29.07.2021 முதல் 30.07.2031 வரை) நடைமுறையில் இருக்கும். அதன்பின் இருதரப்பினரும் விரும்பினால் இதைக் கால நீட்டிப்புச் செய்து கொள்ளலாம்.

6. இந்நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாறுதலுக்கான தேவை ஏற்படின் இருதரப்பினரும் கலந்தாலோசித்து மாற்றங்கள் மேற்கொள்ளுதல்.

7. இந்த உடன்படிக்கை வணிக நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல.மாறாக தமிழின் செழுமைக்காக குறிப்பாக மாணவர்களின் மேம்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளுதல்.

மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் பி.கே.ஆர். மகளிர் கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் தே.மைதிலி மற்றும் சங்க இலக்கிய ஆய்வு நடுவத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் சே.கரேக ஆகியோரின் இசைவோடு மேற்கொள்ளப்படுகின்றன.

29/07/2021

முனைவர் சே.கரேக
நிறுவனர் (ம) தலைவர்
சங்க இலக்கிய ஆய்வு நடுவம்
பெரம்பலூர்-621212.

29/07/2021

பேரா.முனைவர் தே.மைதிலி
முதல்வர்
பி.கே.ஆர். மகளிர் கலைக் கல்லூரி
கோபிசெட்டிபாளையம்.-638476.


முன்னிலை:

முதுமுனைவர் மு.தெய்வேந்திரன்
இணைச் செயலாளர்
சங்க இலக்கிய ஆய்வு நடுவம்
பெரம்பலூர்-621212.

முனைவர் ச.மரகதமணி
தமிழ்த்துறைத் தலைவர்
பி.கே.ஆர். மகளிர் கலைக் கல்லூரி
கோபிசெட்டிபாளையம்.-638476.

P.K.R. ARTS COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
29/07/2021
GOBICHETTIPALAYAM-638476

**MYRADA**


भारतीय गैर न्यायिक

बीस रुपये Rs.20

रु.20 TWENTY RUPEES

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU 19 APR 2022 86AB 656168

P.K.R. ARTS COLLEGE FOR WOMEN
GOBI.

G.C. ரவிச்சந்திரன்
முத்திரைத்தாள் விற்பனையாளர்,
கோபிசெட்டிபாளையம்.
உரிமம் எண்: 2/2004/கோபி.

புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி
(தன்னாட்சி)
தமிழ்த்துறை
கோபிச்செட்டிபாளையம்

&

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம்
வேளாண் அறிவியல் நிலையம் -MYRADA
கோபிச்செட்டிபாளையம் - ஈரோடுமாவட்டம்

இரு நிறுவனங்களுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

ICAR KVK ERODE (MYRADA)
Senior Scientist & Head
GOBICHETTIPALAYAM

Dr. D. MYTHILI
PRINCIPAL
P.K.R. Arts College For Women
(Autonomous)
Gobichettipalayam - 638 476,
Erode District.

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி, பெண்களுக்கான உயர்கல்விப் பணியில் 28 ஆண்டுகாலமாக சிறப்பாக செயலாற்றி இயங்கிக் கொண்டிருக்கிறது. பாரதியார் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி உரிமையையும், NAAC அமைப்பின் 'A' தரச்சான்றிதழை இருமுறையும் பெற்றுள்ளது. இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி மாணவர்கள் என 3000 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. உயர் கட்டமைப்பு வசதிகளுடன் மிகச்சிறந்த அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு மாணவிகளுக்கு நல்ல வழிகாட்டுதல்களுடன் செயல்பட்டு வருகின்றது.

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியமும், 2017 ஆம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியமும் தமிழ் துறையால் துவங்கப்பட்டது.

இலக்கியக் கல்வியோடு மாணவர்களின் தனித்திறமைகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு விதமான கருத்தரங்குகள், பயிலரங்குகள், பயிற்சி பட்டறைகள், தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவைகளை நடத்திவருகின்றோம்.

கோபி பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி தமிழ்த்துறை மாணவிகள் வேளாண் அறிவியல் நிலையத்தில்(KVK, MYRADA) நடைபெற்ற பல்வேறு பயிற்சிகள் மூலம் மிகுந்த பயனடைந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக மாணவிகள் முன்னேற்றத்தையும் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு எங்கள் கல்லூரி மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தோடு(KVK,MYRADA) 2022 ஆம் கல்வியாண்டு முதல் ஐந்தாண்டுகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய விழைகின்றோம்.

ஒப்பந்தத்தின் நோக்கம்:

பாடத்திட்டம் தவிர்த்து வேளாண் தொழில் முனைவோர் சார்ந்த பயிற்சிகளை கிராமப்புற மாணவியருக்கு வழங்கி அவர்களின் தனித்திறன்களை மேம்படுத்திச் சிறந்த சுயதொழில் முனைவோர்களாக உருவாக்கி தனித்துவத்துடன் செயல்படச் செய்வது.

ஒப்பந்தத்தின் குறிக்கோள்கள்:

- எமது கல்லூரியில் மாதிரி மூலிகைத் தோட்டம் அமைத்தல்.
- மூலிகைத் தோட்டத்தினைப் பராமரிக்கவும் மற்றும் அதன் நாற்றுகளின் உற்பத்தி முறையினைக் கற்பித்தல்
- நாற்றுகளை மாணவிகள் சந்தைப்படுத்துவதற்கு வழிகாட்டுதல்.
- மாணவிகளை இளம் தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கு உதவுதல்.
- சிறுதானியங்களில் இருந்து மதிப்புக் கூட்டுபொருள் தயாரிக்கக் கற்பித்தல்.
- வாழையில் மதிப்புக் கூட்டுப் பயிற்சி வழங்குதல்.

உடன்படிக்கை நிபந்தனைகளும் நெறிமுறைகளும்:

1. இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதன் மூலம் மாணவிகளின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்பை நல்குதல் மற்றும் பல்துறை அறிவை வளர்க்கப் பயிற்சியளித்தல்.
2. இரு நிறுவனங்களின் சார்பாக நடைபெறும் நிகழ்வுகளின் இணைந்து செயல்படுதல்.

3. இந்த உடன்படிக்கை ஐந்து ஆண்டுகாலம் நடைமுறையில் இருக்கும். அதன்பின் இருதரப்பினரும் விரும்பினால் இதைக் காலநீட்டிப்பு செய்துக் கொள்ளலாம்.

4. இந்நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாறுதலுக்கான தேவை ஏற்படின் இருதரப்பினரும் கலந்தாலோசித்து மாற்றங்கள் மேற்கொள்ளுதல்.

5. இந்த உடன்படிக்கை வணிக நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல மாறாக கல்வியினைக் கடந்து மாணவர்களின் தனித்திறன் மேம்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளுதல்.

6. வருடத்திற்கு மூன்று அல்லது நான்கு பயிற்சிகள் வழங்குதல். ஒரு பயிற்சிக்கு குறைந்தது 50 மாணவர்கள் பயன்பெறும் படி செய்தல்.

7. எமது மாணவிகள் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒருநாள் பயிற்சி பெறும் பொழுது அதற்கான பயிற்சி கட்டணம் ரூ.1000 ம், பயிற்றுநர்கள் கல்லூரிக்கு வந்து எமது மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கும் பொழுது அதற்கான பயிற்சி கட்டணம் ரூ.1500 ம் வழங்குவதற்கு ஒப்புக்கொள்கின்றோம்.

8. மேற்கண்ட பயிற்சிகள் சார்ந்த தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு பயிற்றுநர்கள் பார்வையிட வரும் தருவாயில் அவர்களுக்கும் அதற்காக ஒருநாள் கட்டணமாக ரூ.1500 வழங்குகிறோம்.

மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் பி.கே.ஆர். மகளிர் கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் தே.மைதிலி, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.மரகதமணி மற்றும் வேளாண் அறிவியல் நிலையம்(KVK,MYRADA) ஈரோடு மாவட்டம், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் பெ.அழகேசன் அவர்கள் ஆகியோரின் இசைவோடு 22.04.2022 முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்றன.

முனைவர் பெ.அழகேசன்,
முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்,
வேளாண் அறிவியல்
நிலையம்(KVK,MYRADA)
ஈரோடுமாவட்டம்.

கையொப்பம்

ICAR KVK, ERODE (MYRADA)
Senior Scientist & Head
GOBICHETTIPALAYAM


பேரா.முனைவர் தே.மைதிலி,
முதல்வர்,
பி.கே.ஆர்.மகளிர் கலைக் கல்லூரி,
கோபிசெட்டிப்பாளையம்.

கையொப்பம்
Dr. D. MYTHILI
PRINCIPAL
P.K.R. Arts College For Women
(Autonomous)
Gobichettipalayam - 638 476,
Erode District.

முனைவர் ச. மரகதமணி,
பேராசிரியர் (ம) தலைவர்,
தமிழ்த்துறை,
பி.கே.ஆர்.மகளிர் கலைக் கல்லூரி,
கோபிசெட்டிப்பாளையம்.

கையொப்பம்
M.A.,Ph.D.,M.A.(Ling).
638 476,

**Oru Rubai Ariviyal Tamil Arakattalai**



भारतीय गैर न्यायिक

बीस रुपये

Rs.20

रु.20

TWENTY RUPEES

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU

19 APR 2022

86AB 656165

P.K.R. ARTS COLLEGE FOR WOMEN
GOBI.

G.C. ரவிச்சந்திரன்
முத்திரைத்தாள் விற்பனையாளர்,
கோபிசெட்டிபாளையம்.
உரிமம் எண்: 2/2004/கோபி.

ஒரு ரூபாய் அறிவியல் தமிழ் அறக்கட்டளை,
சவுதிஅரேபியா
மற்றும்

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
தமிழ்த்துறை
கோபிசெட்டிபாளையம்
இருநிறுவனங்களுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

ஒரு ரூபாய் அறிவியல் தமிழ் அறக்கட்டளை சவுதிஅரேபியா, பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) கோபிசெட்டிபாளையம் - இடையே கல்வி, ஆராய்ச்சி சார் பரிமாற்றங்கள், மேம்பாட்டுப் பணிகள்,கருத்தரங்குகள், புத்தாக்கப் பயிற்சி, பயிலரங்குகள் செய்துகொள்வது தொடர்பாகப் புரிந்துணர்வு அடிப்படையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெறுகிறது.

திறன்களை... அதிகரிக்கும் விதமாக இவ்வொப்பந்தம் அமைகிறது.

- சான்றிதழ் படிப்பாக இதழியல், ஊடகவியல், கணினி அறிவியல், நாட்டுப்புறக் கலைகள், தொல்லியல், சுற்றுலாவியல், சித்தமருத்துவம், கணினித் தமிழ், இணையவழி வாயிலாக ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும், வாசித்தும் மாணவர்கள் படைப்பாளுமையை வளர்த்துக் கொள்ளுதல், அறிவியல் சார்ந்த கலைச் சொற்கள் உருவாக்கல், தரப்படுத்துதல்.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்த்தப் பெறும் செயல்பாடுகள் இரு நிறுவனங்களின் தலைவர்களும் அவரவர் சார்பில் நியமிக்கப்பெறும் ஆய்வுத்திறனையும் பட்டறிவுடன் கூடிய ஒருங்கிணைப்பாளரையும் சார்ந்தவையாகும்.

ஒப்பந்தத்தினைக் கொண்டு இரு நிறுவனங்களையும் வேறு எந்த அலுவல் நிலையிலான வேண்டுகோளினையும் வைக்காமல் இருப்பது நலம்.

இரு நிறுவனங்களின் அவ்வப்போதைய நிதிநிலையைப் பொறுத்து நிதிசார் தேவைகளை முறையாகப் பேசி புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும். ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்களும் இக்குறிப்பிட்ட பொருண்மைகளில் வெவ்வேறு தளங்களில் தனித்தனியே ஈடுபட்டுக் கொள்ளவும் செயல்படவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்து தருகின்றது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அறிவு மேம்பாட்டிற்கு மட்டும் ஏற்படுத்திக் கொள்ளப் பெறுகின்றது. வணிக நோக்கில் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இரு நிறுவனங்களின் பெயர்களை இருவரும் பயன்படுத்துவதற்கு முன்பாக விரிவாக கலந்தாய்வு செய்துக் கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரு நிறுவனங்களும் முன்னரே தீர்மானித்த செயல்பாடுகளைச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கையாக வெளியிடும் பொழுது. இருவரும் எழுத்து வடிவில் இசைவு பெற்றே வெளியிட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துறைகளின் ஆய்வுக் களங்களில் கீழ்க்காணும் பொதுத்தன்மையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பினை நல்குவது என ஒருமனதாகத் தீர்மானிக்கப் பெற்று இவ்வொப்பந்தம் உருவாக்கப் பெறுகிறது.

கல்லூரி மாணவ, மாணவிகளின் படைப்பாக்கத் திறனை மேம்படுத்தும் வகையிலே பல்வேறு வகையிலான போட்டிகள், மொழிபெயர்ப்புப் பணிகள், சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரையிலான ஆய்வரங்கங்கள், (தொல்காப்பியர் ஆய்வரங்கம், திருவள்ளுவர் ஆய்வரங்கம், சித்தர் இலக்கிய ஆய்வரங்கம், பி.கே.ஆர் ஆய்வரங்கம், பக்தி இலக்கிய ஆய்வரங்கம்) முத்தமிழ் போட்டிகள், சிறப்புச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள், நூல்விமர்சனம், புதிய படைப்பாளிகளின் (மாணவிகள்) நூல்களை வெளியிடுதல், கவிதைப் போட்டிகளை உலக அளவில் நிகழ்த்துதல், கவிஞர்கள், அறிஞர்களின் பிறந்த, இறந்த தினங்களில் அவர்கள் குறித்த நிகழ்வுகளை நடத்துதல், நாட்டுப்புறக் கலைகள், அகழாய்வு, கல்வெட்டு, ஓலைச்சுவடிகள், அறிவியல் தமிழ் வளர்ச்சி, அயல்நாட்டுத் தமிழ், வெளிநாடுகளுடனான நிகழ்வுத் தொடர்பு, பன்னாட்டு அடிப்படையில் பயிலரங்கம் நடத்துதல், மாணவிகளின் படைப்பாக்கத்திறன் போன்றவற்றை இரு நிறுவனங்களும் இணைந்து நடத்தத் திட்டமிடல்.

இணையவழி அணுகுமுறையில் ஆசிரியர்களின் திட்டமிடல், பாடத்திட்ட கட்டமைப்பு, தகவல் தொழில் நுட்பத்தின் வாயிலாக மாணவிகளின் பல்வேறு திறன்களை உலகளவில் எடுத்துச் செல்லல், குழந்தை வளர்ப்புக்கான படிநிலைகளை உணர்த்துதல், இணையத்தின் வாயிலாக இலக்கிய இலக்கண நூல்களை ஆராய்தல், ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களது திறன்களை அதிகரிக்கும் விதமாக இவ்வொப்பந்தம் அமைகிறது.

சான்றிதழ் படிப்பாக இதழியல், ஊடகவியல், கணினி அறிவியல், நாட்டுப்புறக் கலைகள், தொல்லியல், சுற்றுலாவியல், சித்தமருத்துவம், கணினித் தமிழ், இணையவழி வாயிலாக ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும், வாசித்தும் மாணவர்கள் படைப்பாளுமையை வளர்த்துக் கொள்ளுதல். அறிவியல் சார்ந்த கலைச் சொற்கள் உருவாக்கல், தரப்படுத்துதல்.

செவ்வியல் மற்றும் தமிழ் சார்ந்த ஆய்வுகளை இரு நிறுவனங்களும் சிறப்பு உதவித் திட்டத்தில் (Special Assistance Programme-SAP) பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுகள் ISSN எண்ணுடன் ஆய்விதழ் வெளியிடல்.

முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கத்தினை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடல்.

எல்லாவிதமான போட்டித் தேர்வுகளிலும் தமிழே பிரதானமாக இடம் பெற்றுள்ளது. ஆகையால் பள்ளி கல்லூரிகளில் ஆசிரியர் தேர்வு பயிற்சி, மத்திய மாநில பணிகளில் வேலை வாய்ப்பு, செய்தி வாசிப்பு, நிகழ்ச்சித் தொகுப்பு, ஊடகப் பணி வாய்ப்பு, செய்திதாள் துறைப் பணிகள், தட்டச்சுப் பணி வாய்ப்பு, இந்து சமய அறநிலையைத் துறை, தொல்லியல் சார்ந்த வேலை வாய்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்ளுதல் மேற்கண்ட ஒப்பந்தம் மூலம் இணைந்து உருவாக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள், தொகுப்பு நூல்கள், குறுந்தகடுகள் முதலான வெளியீடுகளை இரு நிறுவனங்களும் இணைந்து வெளியிடுதல்.

அறிவுசார் கட்டமைப்பு நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் அகத்தூண்டலுக்கும் துலங்கலுக்கும் மட்டுமே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பெறுகின்றது.

வேறு ஏதேனும் புதிய நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டுமெனில் இரு நிறுவனங்களும் முன்கூட்டியே திட்டமிட்டு கலந்து ஆலோசனை செய்து பின் எழுதி நடத்திக் கொள்ளலாம். இரு நிறுவனங்களும் இணைந்து நிகழ்த்தும் தத்தம் செயல்பாடுகளைத் தனித்தனியே ஆவணப்படுத்திக் கொள்ளலாம் .

ஒவ்வொரு நிறுவனமும் அடுத்த நிறுவனங்களிடமிருந்து பெற்ற தகவல்களை மந்தன (இரகசிய) அறிக்கைகளாகக் கருதிப் பாதுகாக்கவேண்டும்.

எழுத்து வடிவிலான ஆவண வடிவிலான முன்வரைவுகள் இரு நிறுவனங்களும் நன்கு சோதிக்கப் பெற்றே பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன. இவ்வொப்பந்தங்கள் ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2027 வரை ஆகிய ஐந்து ஆண்டுகளுக்கு இவ்வொப்பந்தம் நடைமுறையில் இருக்கும்.

தித்திக்கும் முத்தமிழ் ! எத்திக்கும் பரவட்டும்!!

நாள் : 13 : 04 : 2022

இடம் : கோபி

முதல்வர்

பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
தமிழ்த்துறை,
கோபிசெட்டிபாளையம்.

1.தலைவர்

ஒரு ரூபாய் அறிவியல் தமிழ் அறக்கட்டளை

சவுதிஅரேபியா.

கவி. செங்குட்டுவன்., எம்.ஏ.பி.எட்.
ஊத்தங்கரை - 635 207

சாட்சிகள்

1..துறைத்தலைவர்

தமிழ்த்துறை

பி.கே.ஆர்.மகளிர் கலைக்கல்லூரி

கோபி.

2.இணைப்பேராசிரியர்

தமிழ்த்துறை

பி.கே.ஆர்.மகளிர் கலைக்கல்லூரி

கோபி.

முனைவர் ஜ.யுவராணி, MA.,M.Phil.,Ph.D.,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பி.கே.ஆர்.மகளிர் கலைக்கல்லூரி,
கோபிசெட்டிபாளையம்-638 476, தமிழ்நாடு.

3..உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

பி.கே.ஆர்.மகளிர் கலைக்கல்லூரி

கோபி.

திருமதி. க.உமாமகேஸ்வரி, எம்.ஏ.,எம்.பில்.,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பி.கே.ஆர். மகளிர் கல்லூரி,
கோபி - 638 476.